THE HON: THIRU C. N. ANNADURAI : The Government have already taken necessary steps to see that highly deficit areas do come either the statutory rationing or informal rationing area.

சங்கு எடுக்கும் தொழிலாளர்கள்

* 301 வினு—திரு. டி. மார்டின் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தூத்துக்குடியில் கடலில் சங்கு எடுக்கும் தொழிலாளர்களின் கூலியை உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் தற்சமயம் தமிழக அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ)&(இ) இதனை அரசாங் கம் ஆய்வு செய்து, 1967–68–ம் ஆண்டின் சங்குப் பருவம் முதல் முழு அளவுடைய ஒரு சங்கின் கிரய விலை 47 காசிலிருந்து 60 காசாக உயர்த்தப் பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

THIRU T. MARTIN : Sir, the Fisheries Department classifies chanks under three categories, viz., full-sixed, undersized and worm-defective. The diver who got worm-defective chank catch is paid only a nominal remuneration. So, may I request the Hon. Minister to enhance the nominal remuneration that is being paid to diver for worm-defective chank ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது முழு சைஸ் பற்றித்தான் அவர்கள் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். 47 பைசா வாக இருந்ததை 50 பைசாவாக உயர்த்த வேண்டும் என்று 1964–ல் டைரக்டர் அவர்கள் சிபார்சு செய்தும் கூட, அப்பொழுதிருந்த அரசு அதை உயர்த்தாமல் விட்டுவிட்டார்கள். இன்று விலைவாசி உயர்வு காரண மாக. ஃபுல் சைஸ் சங்கு 47 காசாக இருந்ததை 60 காசாக உயர்த்தித் தந்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல், மற்ற இரண்டு சைஸ்களுக்கும் என்ன விலை கொடுப்பது என்பது குறித்து அவர்களிடமிருந்து கோரிக்கை வந்தால் பரிசீலனை செய்யலாம்.

தென்னார்க்காடு மாவட்ட அரிசனங்களுக்கு மனைகள்

*302 வினு—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு தாழ்த்தப் பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தென் ஆர்க்காடு ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கு 1967–68–ல் மனைகள் வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு, தாலுக்கா வாரியாக ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள், பாதைகள், இடுகாட்டிற்கு நடைபாதை, இடுகாடு ஆகியவற் றிற்காக வகை செய்வதற்கென தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு 1967–68 வரவு-செலவுத் திட்ட திருத்த மதிப்பீட்டில் ரூ. 7,88,500 ஒதுக்கப்பட்டுள் ளது. அம்மாவட்டத்தில் உள்ள எட்டு வட்டங்களுக்கும் அத் தொகை சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இவ்வகையில் ஒவ்வொரு வட்டத்திற்கும் ரூ. 98,563 கிடைத்திருக்கிறது.

திரு ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, அரிஜன மக்களுக்கு மனைகள் வழங்குவதிலே, அரசாங்கம் புறம்போக்கு இல்லாத இடங்களில் சொந்த பட்டாதார்கள் மனைகளுக்கு இடம் கொடுக்கிறோம் என்று ஒப்புக் கொண்டிருந்தும், அந்த இடங்களை வாங்கித் தராமல் சில மாவட்டங்களில் ஓரிரு ஆண்டுகள் தாமதப்படுத்தப்படுகிறதே, அதற்குக் காரணம் என்ன ? அதை விரைவிலே வாங்கிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

1968 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பட்டாதாரர்கள் அரிசன மக்களுக்கு நிலம் தருகிறேன் என்று ஒப்புக்கொண்டு முன் வந்திருப்பதாக தகவல் இதுவரையிலும் இருக்கவில்லை. அரிசனங்களுக்குக் கொடுப்பதற்கு பட்டா நிலங்களை ஆர்ஜிதம் செய்தால், பட்டாதார்கள் வழக்கு மன்றங்களில் வழக்குத் தொடுத்து, இன்றைக்கு ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், யாராவது கொடுக்க முன்வந்தும், அதை எடுக்கவில்லை என்ற குறை இருக்குமானால், அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால், நடவடிக்கை எடுக்கலாம்.

தொழிலாளர் அரசு காப்புறுதித்திட்டம்

*303 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன், திரு. நா. மருதாசலம் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊழியர் அரசாங்க இன்சூரென்ஸ் திட்டத்தின் (Employee State Insurance Scheme) கீழ் வந்துள்ளவர்களின் குடும்பத்தினருக்கும் வைத்திய வசதி அளிக்கும் திட்டம் ராஜ்யம் பூராவும் உள்ளதா ?

(இ) ஆமெனில் அவைகள் எந்தெந்தப் பகுதிகளில் உள்ளன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ வசதியளிக்கும் ஏற்பாடு இம்மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்படவில்லை.

(இ) காப்புறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ வசதியளிப்பதற்காக மேற்படித் திட்டம் கீழ்க்காணும் இடங்களுக்கு மட்டுமே விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1. சேலம்.
2. திருச்சிராப்பள்ளி.
3. காவேரி நகர்.
4. திண்டுக்கல்.
5. திருப்பூர்.
6. உடுமலைப்பேட்டை.
7. சிவகாசி.
8. இராஜபாளையம்.
9. விருதுநகர்.
10. திருநெல்வேலி.
11. செங்கோட்டை.
12. புதுக்கோட்டை.
13. நாகப்பட்டினம்.
14. கும்பகோணம்.
15. மேட்டுப்பாளையம்.
16. ஈரோடு.
17. பொள்ளாச்சி.
18. குடியாத்தம்.
19. வாணியம்பாடி.
20. வேலூர்.
21. நாகர்கோவில்.
22. ராணிப்பேட்டை.
23. டால்மியாபுரம்.
24. மேட்டூர் அணை.
25. சென்னை மாநகரமும் அதன் சுற்றுப்புறமும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS